**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்**.93/2013

பெயர்-திரு. பெருமாள் நாள்.10.11.2025

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**-

**1)** 1-ம் பிரதிவாதி தங்கராஜ் எனக்கு யார் என்று தெரியாது. எனது வழக்குரையில், உள்ள விவரங்கள் அனைத்தும் நான்தான் வழக்கறிஞரிடம் கூறினேன். 2-ம் பிரதிவாதி சின்ராஜ் எனது அக்கா மகன் ஆவார். 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் தந்தையின் சகோதரர் மகன் என எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், இல்லை. எனது வழக்குரையில் 1-ம் பிரதிவாதி தங்கராஜீக்கு பவர்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால், இல்லை. எனது வழக்குரை பத்தி-5 ல் வழக்கு சொத்தைப் பொறுத்து பதிவு செய்யப்பட்ட பொது அதிகாரப் பத்திரத்தை 1-ம் பிரதிவாதி பெயரில் நான் சத்தியமங்கலம் சார்பதிவகத்தில் ஆவண எண்.215/2006-ன் மூலமாக எழுதிக் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளேனா என்றால், இல்லை. நான் வழக்குரையில் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுவிட்டு, தற்போது இல்லை என மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பொது அதிகாரப் பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல என நிரூபணம் செய்ய, கைரேகை நிபுணருக்கு அனுப்பி வைக்க மனு செய்துள்ளீரா என்றால், சரிதான். கைரேகை நிபுணர் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை வைத்து பரிசோதனை செய்ததில், பொது அதிகாரப் பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என அறிக்கை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் நான் தெரிந்துகொண்டே, தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள், நான் விவசாயம் செய்து கொண்டிருந்த பூமியை பிரதிவாதிகள் 40 ஆட்களை அழைத்து வந்து அழித்ததால், நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

**2)** நான் 1-ம் பிரதிவாதி தங்கராஜ்க்கு பவர் அதிகாரம் கொடுத்து, பின்னிட்டு 1-ம் பிரதிவாதி தங்கராஜ் 2-ம் பிரதிவாதி சின்ராஜ்க்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. தங்கராஜ் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் நான் வழக்கறிஞரிடம், என்னுடைய சொத்து சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நான் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகாரப் பத்திரம் வா.சா.ஆ-3 மற்றும் 2-ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தினை வழக்குரையுடன் தாக்கல் செய்துவிட்டு, அதை எனது தரப்பு

ஆவணங்களான வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-3 ஆக குறியீடு செய்துவிட்டு, தற்போது பொது அதிகாரம் பற்றி தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம் எனக்கு தெரியாது. நான் எனது சொத்திற்கு வில்லங்கம் சான்றிதழை பார்த்தேனா என்றால், இல்லை. வழக்கிற்காக நான் பொது அதிகாரம் மற்றும் கிரைய ஆவணங்கள் பற்றி வழக்கிற்கு முன்னதாக 10.05.2013-ல் தெரியவந்ததாக வழக்கிற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்து சம்மந்தமாக சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களின் சான்று நகல் வாங்கினேனா என்றால், இல்லை. நான் 1-ம் பிரதிவாதிக்கு தங்கராஜுக்கு எழுதிக் கொடுத்த பவர் ஆவணத்தின் அடிப்படையில்தான், 2-ம் பிரதிவாதிக்கு 1-ம் பிரதிவாதி தகுந்த பிரதிபலன் அடிப்படையில் கிரையம் கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

3) மேற்படி கிரைய தொகையை நான் 1-ம் பிரதிவாதியிடம் இருந்து பெற்றுக்கொண்டு, அதற்கான ரசீது எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி கிரையத் தேதியிலிருந்து 2-ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்தார் என்றால், சரியல்ல. பின்னிட்டு 3-ம் பிரதிவாதிக்கு 2-ம் பிரதிவாதி கிரையம் செய்து கொடுத்து, அதன் அடிப்படையில்தான் 3-ம் பிரதிவாதி தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளார் என்றால், சரியல்ல. தாவா சொத்தின் அனுபவத்தில் உள்ளதற்கான கந்தாய ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. ஆனால், கந்தாயம் செலுத்தி வருகிறேன். மேற்படி கிரையத்திற்கு பிறகு, நான் தாவா சொத்திற்கு கந்தாய வரி செலுத்தாமல், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில், யார் பெயரில் இருந்தது என்றால், என்னுடைய பெயரில் இருந்தது. பட்டா, ஆர்.எஸ்.ஆர் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. 2-ம் பிரதிவாதியின் பெயரில் கியைரம் ஏற்பட்டதற்கு பிறகு, 2-ம் பிரதிவாதியின் பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. வழக்கு பூமி மானாவரி பூமி என்றால், சரிதான். தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால், இல்லை. நான் திண்ணையூரில் குடியிருந்து வருகிறேன் என்றால், இல்லை. தாவா சொத்தில்தான் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த வீடு திண்ணையூல் ஊருக்குள் உள்ளது.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ரசீது திண்ணையூரில் உள்ள வீட்டிற்குத்தான் செலுத்தியது என்றால், சரிதான். வழக்கு சொத்திற்குள் கட்டியுள்ள வீட்டிற்கு வரி வகையறாக்கள் உள்ளதா என்றால், உள்ளது. ஆனால், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் வீடு இல்லை என்றாலும், அதில் வீடு உள்ளதாகவும், வரி செலுத்துவதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. 1-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்த விவரம், வழக்கு

தாக்கல் செய்வதற்கு முன்பு எத்தனை நாட்களுக்கு முன்பு தெரியும் என்றால், அப்போது தெரியாது. இன்றிலிருந்து 3 ஆண்டுகளுக்கு முன்பாக தெரியவந்தது. 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்றதை கிரைய தேதியிலே தெரிந்துகொண்டே, தற்போது 3 ஆண்டுகளுக்கு முன்னதாக தெரியவந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. நான் 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 21.06.2006- கிரைய தேதியிலே தெரிந்துகொண்டே 3 ஆண்டு காலத்திற்குள் வழக்கு தாக்கல் செய்யாமல், 2013-ல் காலம் கடந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கு சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றாலும், வழக்கு சொத்து 2-ம் பிரதிவாதி கிரையம் பெற்று, அனுபவித்து வந்து, 3-ம் பிரதிவாதி தகுந்த பிரதிபலன் அடிப்படையில் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றால், சரியல்ல. எனவே, வழக்கு சொத்தில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

**3-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை தன்னுடையதாக பாவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.10 14:42:09 +0530

District Munsif